மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி காமராசர் நகர் பகுதியில் ஒரு அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி அரசின் கல்வித் துறைக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. அது நகரியத்தைச் சார்ந்தது அல்ல. நகரியத்தைச் சார்ந்திருக்கின்ற எந்தப் பள்ளிக் கட்டிடமாக இருந்தாலும், உறுப்பினர் அவர்கள் கூறி இருக்கின்ற குறைபாடுகள் விரைவில் களையப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 18. திரு. ஆர். கோடிமாரி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சா

நாகப்பட்டினம் சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

*10198—திரு. ஆர். கோடிமாரி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை நகர் முழுவதும் தண்ணீர் போதிய அளவுக்குக் கிடைக்காது, தாய்மார்கள் அவதிப்படுகின்றனர். நாகை நகரத்தில் தண்ணீர் என்பது எட்டாத கனியாக இருக்கிறது. தாய்க் குலத்தின் தெய்வமாகிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சரவர்கள் சி. எஸ். ஐ. மேல்நிலைப்பள்ளி அருகில் ஒரு மேல்நிலைத் தண்ணீர் தொட்டி அமைத்தால் எங்கள் நாகை

நகர் முழுவதும் தண்ணீர் பஞ்சம் இருக்காது. ஆகவே அமைச்சர் அவர்கள் இந்த நிதி ஆண்டில் அமைத்துத் தர ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை சி.எஸ். ஐ. மேல் நிலைப் பள்ளிக்கு அருகில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை. ஆனால் தற்போதைக்கு நாகப்பட்டினத்தில் நடைமுறையில் இருக்கும் குடிநீர்த் திட்டம் 1914-ல் வகுக்கப்பட்டதாகும். இந்தத் திட்டம் நிமிடத்திற்கு 3400 லிட்டர் குடிநீர் பெறும் வகையில் அன்றைய காலக்கட்டத்தில் வகுக்கப்பட்டிருந்தது. அதைப்போல அபிவிருத்தித் திட்டமென்று 1962-லே ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவிலே தற்போது கொடுக்கின்ற குடிநீர் போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால் இன்றைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு நாகப்பட்டினம் நகராட்சியின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அபிவிருத்தித் திட்டமாக ரூ. 85 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டத்தைத் தயாரித்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 12 ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து நீர் எடுக்கப்பட்டு, 3 மேல்நிலைத் தொட்டிகள் கட்டி, குழாய்கள் மூலம் வழங்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்து, இந்த 3 மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகளும் சால்மன் டார்க், வெளிப்பாளையம், நாகூரிலுள்ள வண்டிப்பேட்டை ஆகிய 3 இடங்களில் அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியது போன்று நாகை சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளியின் அருகில் அந்த மேல்நிலைத் தொட்டியை அமைத்தால் அங்கே மேட்டுப் பகுதியிலிருந்து தண்ணீர் வரவேண்டிய இடங்களுக்கெல்லாம் செல்லும். நாகூரிலும், அமைச்சர் கூறியதைப் போன்று இன்னொரு இடத்திலும் அமைத்துத் தருவதற்கு அவ்வளவு சாத்தியக் கூறு இருந்தாலும் இல்லாவிட்டாலும், அந்த அளவுக்குத் தண்ணீர் கிடைக்காத நிலை இருப்பதால், அந்தப் பகுதியில் மொத்தம் 13 வார்டுகள் இருக்கின்றன. அந்த 13 வார்டு மக்களும் பயன்பெறும் வகையில் சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் அதை அமைத்தால் அந்த மேட்டுப் பகுதிகளுக்கும் தண்ணீர் ஏறும் என்கின்ற நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே தயவுசெய்து அமைச்சர் அவர்கள் இதய தெய்வத்தின் ஆட்சியில் எப்படியாவது செய்து கொடுத்தால் நாகை நகர மக்கள் செழிப்புடன் வாழ வசதியாக இருக்கும் என்று சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூடுதல் அபிவிருத்தித் திட்டத்தின் வாயிலாக நாகப்பட்டினத்தில் மூன்று இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெளிவுபடுத்தியிருந்தேன். சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளி அருகில் என்று சொல்கிறபோது, அந்த மூன்று இடங்களில் ஒன்று சாலமன் பார்க்கிலும், வெளிப்பாளையம் என்ற இடத்திலும், நாகூரில் இருக்கிற வண்டிப்பேட்டை என்ற இடத்திலும் ஆகும். சாலமன் பார்க் என்று சொல்லப்படுகின்ற இடம், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கின்ற அந்த சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளி என்ற இடத்திலிருந்து 200 மீட்டர் தொலைவில் தான் உள்ளது. ஆகவே, அந்த இடமே போதுமானதாக இருப்பதாக நிபுணர்கள் கருதுவதால், அந்த இடத்தையே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தேர்வு செய்திருக்கிறது. உறுப்பினர் கூறியிருக்கின்ற கருத்தின் மீது அறிக்கை பெறப்பட்டு, சாத்தியக்கூறு இருப்பின், மாற்றியமைக்கக் கூடிய நிலை நல்லவையாக அமையும் என்று சொன்னால், அதையும் அரசு கவனித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 19, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

தீண்டாமை ஒழிய பொது விருந்துகள் (Inter-Caste Dinner) நடத்த ஊக்குவித்தல்.

19—

* 11867—டாக்டர் அ. ஸ்ரீதரன்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தீண்டாமை தமிழ்நாட்டில் அடியோடு ஒழிய பொது விருந்துகளுக்கு (Inter-Caste Dinner) ஊக்கம் அளிக்க விழிப்புணர்ச்சி முகாம் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.